**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 1/2024**

**PROSECUTION WITNESS NO.31**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு. தாமோதரன் | **Caste** | : |
| **Father's/Husband Name** | : கோதண்டராமன் | **Religion** | : **Hindu** |
| **Village** | : தஞ்சாவூர் | **Calling (ஓய்வு)** | : காவல் ஆய்வாளர் |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** | : **76/2024** |

**(Accused Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.06.2024**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3,
**திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**<u>C.C.No. 1/2024 14.06.2024</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.04**

**முதல் விசாரணை:**

**1.** நான் தஞ்சாவூர் CBCID குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2006 ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2001ம் ஆண்டிலிருந்து தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தேன். கடந்த 13.07.2001ம் தேதி தஞ்சாவூர் மாவட்ட காவல் துறை அலுவலகத்திலிருந்து ந.க. எண். 24733/C2/2001 பிரகாரம் புகாரை பெற்று மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக ந.க.எண். 2139/2000/ச.ப. நாள். 08.06.2001 பெற்ற புகாரினை தஞ்சாவூர் மாவட்ட குற்ற புலனாய்வு குற்ற எண். 8/2001, ச.பி. 420, 465, 468, 471 இதசவின் படி எதிரிகள் ராசு, தாமரைச்செல்வன், ரெங்கராஜன், சண்முகசுந்தரம், விஜய், செந்தில், செந்தில்முருகன்,ரஞ்சனாகாந்தி, மனோகரன், சந்திரன், மூர்த்தி, செந்தில்குமார், பொன்னையன், ரவி, அன்பு, அன்பழகன், முருகேசன், திருமாவளவன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தேன்.

2. பின்னர் அதன் அசலை வாதியின் புகாருடன் சேர்த்து தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண். I அவர்களுக்கும், நகல்களை சம்மந்தப்பட் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். 14.07.2001ம் தேதி மேலவஸ்தாசாவடி ரவுண்டனா அருகில் எதிரி ராசு, த.பெ. வையாபுரி என்பவரை 14.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும், எதிரியிடம் வாக்குமூலம் பதிவு செய்தும் 16.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து

திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3. பின்னர் 24.07.2001ம் தேதி மாவட்ட நீதிமன்ற பிணை உத்தரவில் சென்றுவிட்டார். 04.08.2001ம் தேதி சாட்சி ஜெயராஜ் 12.09.2001ம் தேதி சாட்சி ஜோஹி 21.09.2001ம் தேதி சாட்சிகள் ராமச்சந்திரன், செந்தில்வேல், மணி ஆகியோரையும், 22.09.2001ம் தேதி சாட்சிகள் சந்திரசேகரன், மாணிக்கம், கிருஷ்ணன் ஆகியோரையும், 24.09.2001ம் தேதி சாட்சிகள் முகமது பதுரூதீன், முருகையன், நடராஜன் ஆகியோரையும், 25.09.2001ம் தேதி சாட்சிகள் திருமதி. வரத சுந்தரி, யசோதா, சுப்பையா ஆகியோரையும், 29.09.2001ம் தேதி சாட்சி ராஜப்பா, 07.10.2001ம் தேதி சாட்சி ராஜா, 30.10.2001ம் தேதி சாட்சி பத்மநாபன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. 22.03.2002ம் தேதி சென்னை அலுவலக தனி புலனாய்வு பிரிவை சேர்ந்த கூட்டுறவு சார் பதிவாளர் திரு. கிருஷ்ணன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ச.பி. 81 சொசைட்டி சட்டத்தின் கீழ் விசாரணை தொடர்பாக குற்றவியல் நடவடிக்கைக்கு தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக சி. எண். 51102/C2/2001, நாள். 13.12.2001 பிரகாரம், 22.12.2001ம் தேதி பெறப்பட்ட தஞ்சை துணை பதிவாளரின் கடித எண். 4099/2001, நாள். 05.12.2001ன் படி உள்ள அறிக்கையில் 18 எதிரிகளை தவிர மேலும் 21 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கண்டு இருந்தது. மேற்படி 21 எதிரிகளில் 2 எதிரிகளான ராசு மற்றும் ரெங்கராஜன் ஆகியோர் ஏற்கனவே இருந்த 18 எதிரிகளில் பட்டியலில் அடங்குவார்கள்.

5. அதன்படி அரசு வழக்கறிஞர் கருத்துரை பெற்று கணம் நீதித்துறை நடுவர் முன்பு தனி அறிக்கை சமர்பித்தேன். 12.04.2002ம் தேதி சாட்சிகள் ஆப்புநாதன், திருமதி. தமிழ்மணி ஆகியோரையும், 19.04.2002ம் தேதி சாட்சிகள் சந்தான கிருஷ்ணன், சண்முகநாதன், அய்யாசாமி ஆகியோரையும், 06.05.2002ம் தேதி சாட்சி கிருஷ்ணன், 30.07.2002ம் தேதி சாட்சிகள் ஆறுமுகம், சுப்ரமணி, முருகேசன் ஆகியோரையும், 29.08.2002ம் தேதி சாட்சிகள் ஜோஹி, சாரங்கபாணி, அமிர்தலிங்கம் ஆகியோரையும், 16.09.2002ம் தேதி சாட்சிகள் கலியமூர்த்தி, தர்மராஜ் ஆகியோரையும், 24.09.2002ம் தேதி சாட்சிகள் ஆவுடையப்பன், திரு. தமிழ்மணி ஆகியோரையும், 27.09.2002ம் தேதி சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, தனராஜ் ஆகியோரையும், 11.11.2002ம் தேதி சாட்சிகள் முத்துசாமி, சிவக்குமார் ஆகியோரையும், 16.12.2002ம் தேதி சாட்சிகள்

கார்த்திகேயன், வெங்கட ராம சுப்ரமணியன், ராஜேந்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. 06.01.2003 ம் தேதி இவ்வழக்கில் சம்மந்தபட்ட 25 விண்ணப்பங்களில் உள்ள வங்கி தலைவர்களின் கையொப்பங்கள், அலுவலக முத்திரைகள் மற்றும் துறை பதிவாளர்களின் கையொப்பங்கள் ஆகியவைகளின் உண்மை தன்மை அறியும் பொருட்டு சம்மந்தப்பட்ட கூட்டுறவு தொடக்க வேளாண்மை, கூட்டுறவு வங்கி தலைவர்களின் கையொப்பங்கள், துணை பதிவாளர்களின் கையொப்பங்கள், அலுவலக முத்திரைகள் ஆகியவைகளின் மாதிரியுடன் தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண். I மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வாக உதவி இயக்குநருக்கு அனுப்பி உள்ளேன்.

7. பின்னர் 06.08.2003 ம் தேதி கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். I அவர்களிடம் பெறப்பட்ட சென்னை தடய அறிவியல் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அறிக்கையின் நகல் வழங்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 14.08.2003 ம் தேதி சாட்சி ராமு தடய அறிவியல் அலுவலக உதவி ஆய்வாளர் (Scientific Assistant) என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணை முடித்து 20.08.2003 ம் தேதி 33 எதிரிகள் மீது ச.பி. 465, 468, 471, 472, 420 உ/இ 34 இதசவின் படி நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **ஆவணங்களை குறியீடு செய்வதற்காக அரசு தரப்பு வேண்டுகோளின் படி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/-எஸ்.சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.